27.02.2017

தினமணி

## தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறப்பு: விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி



சாத்தனூர் அணையில் இருந்து தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டதால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களின் ஏரிப் பாசனத்துக்காக கடந்த 12-ஆம் தேதி சாத்தனூர் அணை திறக்கப்பட்டது. அணையின் வலது, இடதுபுற கால்வாய்கள் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 88 ஏரிகளுக்கு தண்ணீர் சென்றது.

இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்ட மக்களின் குடிநீர் தேவையைப் போக்கும் வகையில் தென்பெண்ணை

ஆற்றில் சனிக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. 24 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டதால் திருவண்ணாமலை மாவட்ட தென்பெண்ணை ஆற்றங்கரையோர பகுதிகளில் நீர்மட்டம் உயர்ந்தது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்கக் கோரிக்கை**



குன்னூர் அருகே இத்தலார் பகுதிக்கு உள்பட்ட விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, அவர்கள் மாவட்ட ஆட்சியர், மத்திய கூட்டுறவு வங்கி அதிகாரி, முதல்வர் தனிப்பிரிவு உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள மனு விவரம்: குன்னூர் அருகே உள்ள இத்தலார் பகுதிக்கு உள்பட்ட தேனிதலா, தெம்பட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இங்குள்ள கூட்டுறவு

வங்கியில் உறுப்பினர்களாக உள்ளோம். பருவமழை பொய்த்த நிலையில் தேயிலை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வறட்சியின் பிடியில் இருந்து விடுபட பயிர்க் கடன் வழங்கக் கோரி கூட்டுறவு வங்கியில் விண்ணப்பித்துள்ளோம்.

ஆனால், கடன் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு எவ்விதமான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. விவசாயிகளுக்காக கடன் வழங்க ரூ. 4 கோடிக்குமேல் அரசு நிதி ஒதுக்கியுள்ளது. ஆனால், கடன் வழங்க கூட்டுறவு வங்கிகள் தாமதிக்கின்றனர். எனவே, விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்க உரிய நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல்லை காய்கறி சந்தைகளில் கத்தரிக்காய் விலை கடும் உயர்வு**



திருநெல்வேலி காய்கறி சந்தைகளில் கத்தரிக்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தின் தோட்டப் பயிர்களில் தென்னை, மா, எலுமிச்சை, கத்தரி, தக்காளி, பல்லாரி உள்ளிட்டவை முக்கிய பங்கு வகிக்கின்றன. பாவூர்சத்திரம், ஆலங்குளம், தென்காசி, புளியங்குடி, சிவகிரி, வாசுதேவநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தோட்டங்களில் கத்தரி, தக்காளி, பல்லாரி அதிகளவில் பயிரிடப்படுகிறது. இங்கு சாகுபடி செய்யப்படுபவை உள்மாவட்டங்களுக்கு மட்டுமன்றி கேரள பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நிகழாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனதால் தோட்டங்களில் உள்ள கிணறுகள் வறண்டு காய்கனி சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் காய்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. திருநெல்வேலி உழவர்சந்தையில் காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோவுக்கு): கத்தரி-ரூ.60, வெண்டைக்காய்-ரூ.50, தக்காளி-ரூ.32, அவரைக்காய்-ரூ.44, கொத்தவரை-ரூ.40, புடலங்காய்-ரூ.18, பாகற்காய்-ரூ. 44, பீர்க்கங்காய்-ரூ.20, சுரைக்காய்-ரூ.12, தடியங்காய்-ரூ.12, பூசணிக்காய்-ரூ.18, மாங்காய்-ரூ.35, மிளகாய்-ரூ.22, முள்ளங்கி-ரூ.14, சேனைக்கிழங்கு-ரூ.30, கருணைக்கிழங்கு-ரூ.30, சேம்பு-ரூ.24, சிறுகிழங்கு-ரூ.40, தேங்காய்-35 இஞ்சி-ரூ.36, உருளைக்கிழங்கு-ரூ.18, கேரட்-ரூ.22, பீட்ரூட்-ரூ.18, முட்டைகோஸ்-ரூ.12, சவ்சவ்-ரூ.26, ரிங்பீன்ஸ்-ரூ.62, காலிபிளவர்-ரூ.25, பூண்டு-ரூ.100., பல்லாரி- ரூ.14, சின்ன வெங்காயம்-ரூ.40.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், கத்தரிக்காய், தக்காளி, தேங்காய் போன்றவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மாசி, பங்குனி மாதங்களில் சுபமுகூர்த்தம் மற்றும் கோயில் விழாக்கள் அதிகம் நடைபெறும். இந்த

நேரத்தில் காய்கறிகளின் தேவை அதிகமிருக்கும். மகசூல் போதிய அளவு இல்லாததால் உள்ளூர் தோட்டங்களில் இருந்து வரத்து 80 சதவீதம் குறைந்துள்ளது. மதுரை, ஓசூர், சென்னை சந்தைகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் காய்கறிகளுக்கு போக்குவரத்துச் செலவு காரணமாக விலை அதிகம் உள்ளது. இன்னும் இரு வாரங்களுக்கு இந்த விலை உயர்வு தொடர வாய்ப்புள்ளது என்றனர்.